ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/61 - 2016 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2016.09.30

*1986/61 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

தேசிய விளையாட்டுச் சங்கக் கட்டளைத் தொடரின் 54 (3) பிரிவின் கீழ் உத்தரவு

விளையாட்டுக்கள் அமைச்சர் தயாசிறி ஜயசேகர அவர்களினால் இலங்கை ஓட்டோ மொபைல் ஸ்போட்ஸ் சம்மேளனத்தின் உத்தியோகத்தர் தெரிவை மீள நடாத்தும் வரை அச்சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தகுதிவாய்ந்த உத்தியோகத்தராக விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான சாமசுந்தர ஏக்கநாயக்க ராஜவர்தன தென்னக்கோன் முதியன்செலாகே சமன் பிரியந்த பண்டார அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 39 (1) ஆம் வாசகத்திற்கமைய இலங்கை ஓட்டோ மொபைல் ஸ்போட்ஸ் சம்மேளனத்திற்கு இத்தால் அறிவிப்பதுடன் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆவது வாசகத்தின் கீழ் 2013, ஓகத்து மாதம் 30 ஆந் திகதிய 1825/38 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் 54 (3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டுச் சங்கம் தொடர்பான கோவைக்கமைய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க,

விளையாட்டுக்கள் அமைச்சின் விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான சாமசுந்தர ஏக்கநாயக்க ராஜவர்தன தென்னக்கோன் முதியன்செலாகே சமன் பிரியந்த பண்டார அவர்களை இலங்கை ஓட்டோ மொபைல் ஸ்போட்ஸ் சம்மேளத்தின் புதிய உத்தியோகத்தர் சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பினை நடாத்த இத்தால் உத்தரவிடுகிறேன்.

சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,
விளையாட்டுக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, செத்தெம்பர் 28.

10- 390



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.